RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 277 | அக்டோபர்.8 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ஐயப்பனை தரிசிக்க சபரிமலைக்கு குடியரசு தலைவர் முர்மு அக்.22ல் வருகை

குமுளி, அக்.,8-

குடியரசு தலைவர் திரவுபதி முர்மு ஐயப்பனை தரிசிப்பதற்காக அக். 22ம் தேதி சபரிமலை வருகிறார். இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் முழுவீச்சில் செய்யப்பட்டு வருகின்றன. சபரிமலை ஐயப்பன் கோயிலில் வரும் 18ம் தேதி துலாம் மாத (ஐப்பசி) பிறப்பை முன்னிட்டு வரும் 17ம் தேதி மாலை நடை திறக்கப்பட உள்ளது.



ஐப்பசி மாத வழிபாட்டில் குடியரசு தலைவர் திரவுபதி முர்மு கலந்துகொண்டு ஐயப்பனை தரிசிக்க உள்ளார். இவர் ஏற்கெனவே மே மாதம் சபரிமலைக்கு வருவதாக இருந்த நிலையில், பம்பை, சந்நிதானம் உள்ளிட்ட பகுதிகள் ராணுவ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. ஆனால் அப்போது நடைபெற்ற இந்தியபாகிஸ்தான் போர்சூழலால் அவர் சபரிமலைக்கு வர முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் இந்த மாதம் அவர் வர உள்ளதாக தேவசம் போர்டு அதிகாரிகள் தெரிவித்தனர். இதுகுறித்து தேவசம் போர்டு அமைச்சர் வி.என்.வாசன் கூறும்போது, குடியரசு தலைவர் திரவுபதி முர்மு சபரிமலைக்கு வர உள்ளார். வரும் 22ம் தேதி கொச்சி விமான நிலையத்துக்கு வந்து, அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் நிலக்கல் வருகிறார். தொடர்ந்து கார் மூலம் பம்பை வந்து அங்கிருந்து நீலிமலை பாதை வழியே நடந்து செல்ல உள்ளார். இருப்பினும் மாற்று ஏற்பாடாக வாகனம் மூலம் சந்நிதானம் செல்லவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, என்றார்.

பக்தர்களிடையே குழப்பம்: இதற்கிடையே பாதுகாப்பு கருதி அவர் வருகை குறித்த முழு விவரமும் தேவசம் போர்டுக்கு வரவில்லை. குடியரசு தலைவர் வரும் நாளில் பாதுகாப்பு காரணங்களுக்காக பக்தர்களின் வருகையை கட்டுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் வரும்17ம் தேதி மட்டுமே பக்தர்களின் தரிசனத்துக்காக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் அடுத்தடுத்த நாட்களில் தரிசன முன்பதிவுகளை மேற்கொள்வதில் பக்தர்களிடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது.

## தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 20 ஆயிரம் சிறப்பு பேருந்துகள்: போக்குவரத்து துறை அமைச்சர் தகவல்

சென்னை, அக்.08-

தீபாவளி பண்டிகைக்கு மக்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல வசதியாக 20,378 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு போக்குவரத்துத் துறை சார்பில் மேற்கொள்ளப்படும் சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் சிறப்பு பேருந்துகள் இயக்கம் குறித்த ஆலோசனை கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது. இதில், போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர், துறை செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, ஆணையர் கஜலக்ஷ்மி, போக்குவரத்து கழக மேலாண் இயக்குநர்கள், காவல்துறை, சிஎம்டிஏ, நெடுஞ்சாலை உள்ளிட்ட அரசுத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் சிவசங்கர் கூறியதாவது: தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, வரும் 16ம் தேதி முதல் 19ம் தேதி வரை சென்னையிலிருந்து தினசரி இயக்கக்கூடிய 2,092 பேருந்துகளுடன் 5,710 சிறப்பு பேருந்துகள் என 4 நாட்களுக்கும் சேர்த்து மொத்தமாக 14,268 பேருந்துகளும், பிற ஊர்களிலிருந்து மேற்கண்ட நாட்களுக்கு 6,110 சிறப்பு பேருந்துகள் என மொத்தம் 20,378 பேருந்துகள் இயக்கப்படும்.

பண்டிகை முடிந்து பிற ஊர்களிலிருந்து சென்னை திரும்ப வசதியாக 21ம் தேதி முதல் 23ம் தேதி வரை, தினசரி இயக்கக்கூடிய 2,092 பேருந்துகளுடன் 4,253 சிறப்பு பேருந்துகளும், மற்ற பிற முக்கிய ஊர்களிலிருந்து பல்வேறு ஊர்களுக்கு 4,600 பேருந்துகள் என மொத்தம் 15,129 பேருந்துகளும் இயக்கப்படும். சென்னையில் உள்ள 3 பேருந்து நிலையங்களில் இருந்தும் இந்த பேருந்துகள் இயக்கப்படும். பயணிகள் முன்பதிவு செய்ய வசதியாக கிளாம்பாக்கத்தில் 10, கோயம்பேட்டில் 2 என மொத்தம் 12 முன்பதிவு மையங்கள் செயல்படும். மேலும் டினஎஸ்டிசி செயலி மற்றும் www.tnstc.in இணையதளம் மூலமாகவும் முன்பதிவு செய்துகொள்ளலாம்.

பேருந்துகளின் இயக்கம் மற்றும் புகார் தெரிவிக்க 94450 14436 என்ற தொலைபேசி எண்ணை 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம். மேலும், ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூல் உள்ளிட்ட புகார்களுக்கு 1800 425 6151 மற்றும் 04424749002, 04426280445, 04426281611 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். பொதுமக்களின் வசதிக்காக கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து மற்ற இரண்டு பேருந்து நிலையங்களுக்கும் செல்ல ஏதுவாக கூடுதலாக 150 மாநகர பேருந்துகள் இயக்கப்படும்.

## ‘நான் சொன்னதால் நிறுத்தினார்கள்’: இந்தியா பாக். மோதல் குறித்து மீண்டும் பேசிய ட்ரம்ப்

நியூயார்க், அக்.08-

கடந்த மே மாதம் இந்தியா பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான மோதலை தான் சொன்னதால் அவர்கள் நிறுத்திக் கொண்டதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் மீண்டும் தெரிவித்துள்ளார்.



“அமெரிக்காவுக்கு வரி விதிப்பு முக்கிய மான வருவாயாக அமைந்துள்ளது. அதோடு அதன் மூலம் சர்வதேச அளவில் அமைதியை நிலைநாட்ட எங்களால் முடிகிறது. வரி விதிப்பு விவகாரத்தை சுட்டிக்காட்டி போர்களை நான் நிறுத்தி உள்ளேன்.

அணு ஆயுத பலம் கொண்ட இந்தியாவும் பாகிஸ்தானும் மோதலில் ஈடுபட்டன. இதில் ஏழு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. அந்தச் சூழலில் நான் அவர்களிடம் என்ன சொன்னேன் என்பதை இங்கு சொல்ல வேண் டாம் என கருதுகிறேன். ஆனால், நான் சொன்னதற்கு தகுந்த பலன் கிடைத்தது. அவர்கள் மோதலை நிறுத்திக் கொண்டார்கள். நிச்சயம் அதில் வரி விதிப்பு மற்றும் வணிகம் உள்ளது” என ஓவல் அலுவலகத்தில் பத்திரிகையாளர்களை சந்தித்த ட்ரம்ப் தெரிவித்தார்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான மோதலை தான் நிறுத்தியதாக கடந்த மே 10ம் தேதிக்கு பிறகு பல்வேறு முறை ட்ரம்ப் சொல்லி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதோடு உலக அளவில் நடைபெறும் பல்வேறு நாடுகளுக்கு இடையிலான போரை தான் நிறுத்தியதாக ட்ரம்ப் தொடர்ந்து சொல்லி வருகிறார்.

இந்தியா பாகிஸ்தான் மோதல்: காஷ்மீரில் உள்ள பஹல்காம் பகுதியில் கடந்த ஏப்ரல் 22ம் தேதி அன்று பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில், 26 சுற்றுலா பயணிகள் கொல்லப்பட்டனர். அதற்கு பதிலடியாக இந்திய முப்படைகளும் ‘ஆபரேஷன் சிந்தூர்’ என்ற பெயரில் பாகிஸ்தானில் உள்ள 9 தீவிரவாத முகாம்கள், விமானத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதல் மே 7ம் தேதி தொடங்கி 10ம் தேதிக்குள் முடிந்துவிட்டது. பாகிஸ்தான் தரப்பும் இந்திய எல்லையோர மாநிலங்களில் தாக்குதல் முயற்சியை மேற்கொண்டன. இருப்பினும் அதனை இந்திய பாதுகாப்பு படை இடைமறித்து அழித்தது. அதன் பின்னர் இருதரப்புக்கும் இடையில் போர் நிறுத்தம் ஏற்பட்டது. இந்த போர் நிறுத்தத்தில் மூன்றாம் தரப்பினரின் தலையீடு இல்லை என்றும், இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே நேரடி பேச்சுவார்த்தை மூலம் போர் நிறுத்தம் ஏற்பட்டது என்றும் இந்திய அரசு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## “புதிய காலத்தின் தொடக்கம்!” : சர்வதேச மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரை!

சென்னை, அக்.8-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், “AeroDefCon 2025” என்ற மூன்று நாள் சர்வதேச மாநாட்டை தொடங்கி வைத்து ஆற்றிய உரை.



வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்துறை சார்ந்த நிறுவனங்களுக்கான ஏரோடெஃப்கான் 25 என்ற இந்த மாநாட்டை தமிழ்நாட்டில் முதன்முறையாக நாம் தொடங்கி வைத்திருக்கிறோம்.

தமிழ்நாடு இன்றைய தினம், இந்தியாவை ஈர்க்கும் நிலையில் இருந்து, உலகை ஈர்க்கும் மாநிலமாக உயர்ந்திருக்கிறது. இப்படிப்பட்ட முன்னோடியான மாநாடுகளை நம்முடைய தொழில்துறை சார்பில் நடத்துவதால்தான், இந்த மாநாடுகள் எல்லாம், உலகளவில் பேசப்படுகிறது.

அது மட்டுமல்ல, அனைத்துவிதமான வளர்ந்து வரும் தொழில்களையும் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு இருப்பதன் அடையாளம்தான் இந்த மாநாடு.

இது வெறும் கண்காட்சி இல்லை! புதிய தொழில் நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரை கண்டறிந்து, அவர்களிடையே கூட்டு முயற்சியில் புதிய தொழில் ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதற்கான தளம்!

இந்த மாநாட்டை சிறப்பாக ஒருங்கிணைத்திருக்கக்கூடிய தொழில்துறை அமைச்சர் தம்பி டி.ஆர்.பி.ராஜா அவர்களுக்கும், தொழில்துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு அனைத்து வகையான தொழில்களிலும் தடம் பதித்து வருகிறது. தமிழ்நாடு உற்பத்தித் துறையில் Lead-erஆக மாறிக்கொண்டு வருகிறது. ஏற்றுமதி செய்யப்படும் மொத்த தானியங்கி வாகனங்களில் தமிழ்நாட்டின் Share மட்டும் எவ்வளவு தெரியுமா? 40 விழுக்காடு!

அதுமட்டுமா? மூன்றில் இரண்டு பங்கு இருசக்கர மின்வாகனங்கள் இங்குதான் உற்பத்தி செய்யப்படுகிறது.

2024-25ஆம் ஆண்டில், 14.6 பில்லியன் டாலர் மதிப்புடைய மின்னணுப் பொருட்களை ஏற்றுமதி செய்து அதிலும் நாம்தான் முதலிடம்!

45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் இருக்கிறது. இந்தியாவிலேயே அதிகபட்சமாக தமிழ்நாட்டின் மொத்த நிதிநிலை உற்பத்தி துறை 20 விழுக்காடு பங்கு வகிக்கிறது. உலகளாவிய பொருளாதாரத்தில், தமிழ்நாடு முன்னணி 50 இடங்களில் இருக்கிறது.

இந்தியாவிலேயே 11.19 விழுக்காடு பொருளாதார வளர்ச்சியுடன் Double Digit ஐ எட்டிப் பிடித்திருக்கும் ‘One and Only’ மாநிலம் தமிழ்நாடுதான். எதைச் செய்தாலும், ஆல்ரவுண்டாக, பெஸ்ட்டாக செய்வதால்தான் இது சாத்தியமாகி இருக்கிறது. இதில், மிக முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டியது பாதுகாப்புத் தொழில்துறை!

‘தமிழ்நாடு பாதுகாப்புத் தொழிற்துறை வழித்தடத் திட்டம்’ இந்த துறை சார்ந்த வளர்ச்சிக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இந்தத் துறையில், இந்தியாவின் உற்பத்தி மையமாக தமிழ்நாடு மாற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். பாதுகாப்பு தொழிற்துறை வழித்தடம் எதிர்காலத்தில் முக்கியப் பங்காற்ற இருக்கிறது.

உயர்தர ஜெட் என்ஜின் பாகங்களில் இருந்து, டிரோன்கள் உற்பத்தி வரை நடைபெற இருக்கிறது. வளர்ந்துவரும் விண்வெளி தொழில்நுட்பம் சார்ந்த உற்பத்திப் பிரிவுகள் இதில் இருக்கிறது. தமிழ்நாடு பாதுகாப்பு தொழிற்துறை வழித்தடத் தொலைநோக்குத் திட்டம் வெறும் எண்ணமாக மட்டுமல்லாமல், பல முக்கியத் திட்டங்கள் செயல்பாட்டிற்கு வந்ததன் மூலமாக, இந்தியாவின் பாதுகாப்புத் துறையின் எதிர்காலத்தில் தமிழ்நாட்டின் இடத்தை உறுதிப்படுத்தியிருக்கிறது.

தமிழ்நாட்டில் பாதுகாப்பு தொழிற்துறை வழித்தடத்தில் அமைந்திருக்கும் நகரங்களில் பல திட்டங்கள் தொடங்கப்பட்டிருக்கிறது.

கோவை வரப்பட்டியில், 360 ஏக்கரில் ‘பாதுகாப்பு தொழிற்துறைப் பூங்கா’ அமைக்கப்பட்டு வருகிறது.

விமான பழுதுபார்த்தல், பராமரிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு பணிகள் மேற்கொள்ள நேரடியாக ஓடுதள அணுகு வசதியுடன் கூடிய வான்வெளிப் பூங்கா, சூலூரில் 200 ஏக்கரில் அமைக்கப்பட்டு வருகிறது.

திருச்சியில் 90க்கும் மேற்பட்ட விஷிவிணி நிறுவனங்கள் இயந்திரவியல் உற்பத்தித் துறையில் தங்கள் தொழில்களை பெருக்க TREAT அமைப்பு உதவுகிறது.

சென்னைக்கு அருகில் வல்லம் வடகாலில் வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் பரிசோதனை வான்வெளி நிறுவனங்களுக்காக அமைக்கப்பட்டு வரும் ஏரோ ஹப் என்ற திட்டம் முடிவடையும் நிலையில் இருக்கிறது.

இப்படி, இதுபோன்ற அனைத்துத் திட்டங்களும், முதலீடுகளை ஈர்த்தல் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல் இந்தத் துறையில் இந்தியாவின் தற்சார்பை உறுதி செய்தல் ஆகியவற்றில் தமிழ்நாட்டின் தனித்துவத்தை உறுதி செய்கிறது.

ஒசூரில் நடைபெற்ற TN Rising முதலீட்டாளர் மாநாட்டில் வானூர்தி மற்றும் பாதுகாப்பு துறையில் ஈர்க்கப்பட்ட முக்கியமான முதலீடுகள் உலகளவில் உற்பத்தித் துறையில் ஒசூர் நகரத்தின் பங்கை உறுதி செய்கிறது. இந்த முதலீடுகள், தமிழ்நாட்டின் தொழில்துறைச் சூழல், திறமையான மனிதவளம் மற்றும் சிறப்பான உற்பத்தி சங்கிலிக்கு சான்றாக இருக்கிறது.

தமிழ்நாடு பாதுகாப்பு தொழிற்துறை வழித்தடத் திட்டத்தை செயல்படுத்த தொடங்கியதில் இருந்து, இதுவரை 23 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் முதலீடுகள் ஈர்க்கப்பட்டிருக்கிறது. இதில், 5 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டிருக்கிறது.

2032க்குள், 75 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்க நாங்கள் இலக்கு நிர்ணயித்திருக்கிறோம். இந்த வழித்தடத்தில் இருக்கும், ஒவ்வொரு நகரமும் தனித்துவமான மையங்களாக விளங்குகிறது.

சென்னை என்பது ஆராய்ச்சி மற்றும் கட்டமைப்புகளுக்கான மையமாகவும், கோயம்புத்தூர் - நுண்பொறியியல் திறனுக்கான மையமாகவும், ஒசூர் - வான்வெளி மற்றும் மின்னணு தொழில்நுட்ப மையமாகவும், சேலம் - உயர் தொழில்நுட்பப் பொருட்கள் மையமாகவும், திருச்சி - கனரக இயந்திர உற்பத்தி மையமாகவும் இருக்கிறது. இவை எல்லாம் ஒன்றாக சேர்ந்து, தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியும் முதலீட்டிற்கு உகந்த இடமாக விளங்குவதைக் காட்டுகிறது.

தூத்துக்குடியில் இருக்கும் உட்கட்டமைப்பு வசதிகளை வைத்து விண்வெளித் துறையில் பொருளாதார வளர்ச்சிக்கான தெளிவான திட்டப்பாதையை நாங்கள் வகுத்திருக்கிறோம். இந்திய விண்வெளித் துறை வளர்ச்சிக்கு தமிழ்நாடு உறுதுணையாக இருக்கும். சென்னை காட்டுப்பள்ளி கப்பல் கட்டும் தளம், சூலூர் மற்றும் வல்லம் வடகால் வான்வெளி பூங்காக்கள் தூத்துக்குடியில் அமையவுள்ள விண்வெளிப் பூங்கா ஆகிய அனைத்தும் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், நாட்டின் பாதுகாப்புத் துறைக்கும் உறுதுணையாக இருக்கிறது.

இந்த மாநாட்டில், பங்கேற்றிருப்பவர்களிடம் நான் சொல்ல விரும்புவது, தமிழ்நாட்டில் உங்களை கவரும் தொழில் சூழல் இருக்கிறது. திறமையான இளைஞர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் பெரிய தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு மட்டுமல்ல, MSME நிறுவனங்களின் பங்கும் பெரிய அளவில் இருக்கிறது. அதில், 700க்கும் மேற்பட்டவை வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறையில் செயல்படுகிறது. பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய காத்திருக்க வேண்டியதில்லை. தமிழ்நாடு இப்போதே தயாராக இருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சகம், D.R.D.O. மற்றும் நம்முடைய பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்கள் தங்களின் தொழில்நுட்பம், திறன் மற்றும் ஒத்துழைப்பை வழங்கி, இந்த பயணத்தில் எங்களோடு இணைந்து செயல்படுகிறார்கள். புதிய கூட்டுத் திட்டங்கள், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் வான்வெளி, கடல், விண்வெளி துறைகளில் புதிய தொழில் முயற்சிகளுக்கான தொடக்க மேடைதான், இந்த மாநாடு!

இன்று இந்த நிகழ்வில். எங்களோடு இணைந்திருக்கும் 19க்கும் மேற்பட்ட நாடுகளுடன் சேர்ந்து, தொழில் வளர்ச்சிக்காக செயல்படுவோம் என்று நான் உறுதி அளிக்கிறேன். செயல் வேகத்துடன், உறுதியுடன், உங்கள் இலக்குகளை நிறைவேற்ற தமிழ்நாடு முழு ஆதரவளிக்கும். வடிவமைப்பு, மேம்பாடு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றிற்கான முன்னணித் தளமாக தமிழ்நாடு திகழ வேண்டும்! அதற்கு உங்கள் எல்லோருடைய ஆதரவும் தேவை!

வானூர்தி, விண்வெளி, கப்பல் உற்பத்தி மற்றும் பாதுகாப்புத் துறைகளில் புதுமைகள் நிறைந்த ஏற்றுமதிக்கு உகந்த தன்னிறைவு பெற்ற இந்தியாவை உருவாக்க பாதுகாப்புத்துறையில் பணியாற்றும் நண்பர்களுக்கும், அறிவியலாளர்களுக்கும், தொழில் முனைவோர்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் தமிழ்நாடு அரசு எப்போதும் துணை நிற்கும்.

இது, ஒரு புதிய காலத்தின் தொடக்கமாக அமையட்டும்! இந்தியாவின் பாதுகாப்பை மட்டுமல்ல, உலக அமைதி, வளம் மற்றும் முன்னேற்றத்தை இயக்கும் ஆற்றலாகவும் தமிழ்நாடு திகழட்டும்!

நன்றி! வணக்கம்!

## கடலோர பகுதிகளில் மீட்பு, மாசு தடுப்பு பணியில் ட்ரோன்கள் பயன்பாட்டை அதிகரிக்க நடவடிக்கை

சென்னை, அக்.08-

தேசிய மாசு தடுப்பு தினத்தை முன்னிட்டு, கடலோர காவல்படையின் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைக்கும் கடலில் ஒத்திகை பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. அதன்படி, மாசு தடுப்பு ஒத்திகை சென்னை அருகே சுமார் 20 கிமீ தொலைவில் கடல் பகுதியில் கடலோர காவல்படை வீரர்கள் நேற்று பயிற்சியில் ஈடுபட்டனர்.

இதில் கப்பலில் தீ விபத்து ஏற்பட்டால், கடலோர காவல் படை கப்பல்கள் விரைந்து சென்று தீயை அணைப்பது, அதிலுள்ள பணியாளர்களை ஹெலிகாப்டர்கள் மூலம் மீட்பது, கடலில் தத்தளிக்கும் பணியாளர்களுக்கு விமானம் மூலமாக மிதவை உபகரணங்களை போடுவது, இரவு நேரங்களில் பிரத்தியேக ஒளி விளக்கை வானில் ஏவி, பிறர் உதவியை கோருவது, கடலில் எண்ணெய் கசிவு ஏற்பட்டால், டார்னியர் விமானம் மூலமாக கண்டறிவது, சிறப்பு மாசு தடுப்பு கப்பல்கள் மூலம் மிதவைகள் மூலமாக கடலில் எண்ணெய் பரவாமல் தடுப்பது, அவற்றை ஸ்கிம்மர்கள் மூலமாக உறிஞ்சுவது, கடலில் தத்தளிப்பவரை, ரிமோட் கண்ட்ரோல் மூலம் இயக்கப்படும் மிதவையை கொண்டு சென்று மீட்பது உள்ளிட்ட ஒத்திகை பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பின்னர், இந்திய கடலோர காவல்படை தலைவர் பரமேஷ் சிவமணி செய்தியாளர்களிடம் கூறுகையில், “கடலோர காவல் படையில் தற்போது 154 கப்பல்கள், 78 விமானம் மற்றும் ஹெலிகாப்டர்கள் உள்ளன. இப்படை, எண்ணெய் கசிவை எதிர்கொள்வதில் சிறப்பாக பணியாற்றி வருகிறது. உலக அளவில் கடலோர மாசு தடுப்பு பணிகளில் பயன்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பங்கள், உத்திகள் இந்திய கடலோர காவல்படையில் செயல்படுத்தப்படுகிறது.

இந்த ஆண்டு ஒத்திகையில் முதன்முறையாக ட்ரோனை பயன்படுத்தி, கடலில் தத்தளிப்போருக்கு மிதவை உபகரணத்தை கொண்டுபோய் சேர்த்திருக்கிறோம். கடலோர பகுதிகளில் மீட்பு, மாசு தடுப்பு பணிகளில் ட்ரோன்கள் பயன்பாட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார். அப்போது, கடலோர காவல் படை ஏடிஜிபிடோனி மைக்கேல், கிழக்கு பிராந்திய கடலோர காவல் படை தலைவர் டட்விந்தர் சிங் சைனி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.




# வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் நிறுவனத் தலைவர், டாக்டர். ஐசரி. கே. கணேசன் பிறந்த நாள் விழாவில் நலத்திட்ட உதவிகள்

பல்லாவரம், அக்.08-

சென்னை அடுத்த வேல்ஸ் வித்யாஸ்ரமம் ஆடிட்டோரியம், தர்கா ரோடு ,பல்லாவரத்தில் வேல்ஸ் பல்கலைக்கழக குழுமத்தின் நிறுவனத் தலைவர்., டாக்டர். ஐசரி. கே. கணேசன் பிறந்த நாள் விழா (அக்டோபர் : 07) சிறப்பாக கொண்டாடப்பட்டது. சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் எம்.எல்.ஏ. கருணாநிதி மற்றும் வேல்ஸ் பல்கலை க்கழக குழுமத்தின் ஆசிரியர்கள், கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள், மருத்துவர்கள் , மருத்துவப் பணியாளர்கள் கலந்து கொண்ட பிறந்தநாள் விழாவில் அனைவருக்கும் சமபந்தி அருஞ் சுவை விருந்து மட்டன் பிரியாணி வழங்கி சிறப்பித்தனர். விழாவில் மாற்றுத்திறனாளிகளுக்கு நிறுவனத் தலைவர்.,டாக்டர். ஐசரி. கே. கணேசன் நலத்திட்ட உதவிகள், பரிசுகளை வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



# தமிழக அரசின் சுகாதாரத்துறை சார்பாக நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம்

மதுரை, அக்.08-

மதுரை மாவட்டம் சேடபட்டியில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் தமிழக அரசின் சுகாதார த்துறை சார்பாக நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமில் சுகாதார துறை துணை இயக்குநர் குமரகுருபரன், இணை இயக்குநர் செல்வராஜ் சேடபட்டி வட்டார மருத்துவ அலுவலர் Dr.விஸ்வநாதபிரபு அரசு இராஜாஜி மருத்துவமனை மன் அருள்சுந்தரேஸ், நுரையீரல் துறை (TB) துணை இயக்குநர் ராஜசேகரன் தொழுநோய் பிரிவு துணை இயக்குநர் விஜயன் குடும்ப நலன் துணை இயக்குநர் நடராஜன், NHM செந்தில் னேஷ், சேடபட்டி சுகா தார நிலைய மருத்துவர் மாரிச்சாமி துணை சுகாதார நிலைய தலைமை மருத்துவர்கள் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் வேல்முருகன், சுகாதார ஆய்வாளர்கள் சுப்ரமணியம் பாலசுப்ரமணி உணவு பாதுகாப்பு துறை அதிகாரி செல்வராஜ், அலுவலர்கள் சிவசந்திரன் சரவணன் ஜெயக்குமார், சுகாதார ஆய்வாளர்கள் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் தெரசா சேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய முன்னாள் தலைவர் ஜெயச்சந்திரன் உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பன் ஒன்றிய செயலாளர் சங்கர பாண்டி வட்டார வளர்ச்சி அலுவலர் கண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மேடவாக்கம் அனைத்து குடியிருப்போர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில்

# பெரிய ஏரி சுத்தம் செய்து, நடைபாதை, உடற்பயிற்சி கூடம் ஆகியவற்றுடன் புதுபிக்கப்பட்ட ஏரியை எம்.எல்.ஏ. ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்

மேடவாக்கம், அக்.08-

செங்கல்பட்டு மாவட்டம் மேடவாக்கம் அனைத்து குடியிருப்போர் சங்கங்களின் கூட்டமைப்பு ஏற்பாட்டில் மேடவாக்கம் பெரிய ஏரியை தூர்வாரி பொதுமக்கள் நடைபயிற்சி செல்லும் வகை வகையில் பூரமைக்க தனியார் நிறுவனங்களின் சமூக மேம்பாட்டு நிதியில் இருந்து புதுப்பிக்கும் பணி ஃப்ளெக்ஸ் அறக்கட்ட ளையின் சிஎஸ்ஆர் நிதியின் சார்பில் மற்றும் தாகம் அறக்கட்டளை மேடவாக்கம் வழிகாட்டுதலின்படி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தொடங்கப்பட்டது. அதன்படி ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் ஏரி தூர்வார ப்பட்டு ஆகாயதாமரை அகற்றி ஏரியை சுத்தம் செய்தனர்.

மேலும் ஏரியை சுற்றி பொதுமக்கள் நடை யிற்சி செய்வதற்காக நடைபாதை அமைத்தும், ஏரியை ஆக்கிரமிப்பு செய்யத வகையில் சுற்று வேலி அமைத்தும்




கொடுக்கப்பட்டனர்.

இந்தநிலையில் பணிகள் நிறைவடைந்த நிலையில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். அரவிந்த் ரமேஷ் புதுபிக் கப்பட்ட ஏரியை ரிப்பன் வெட்டி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இதில் முதியோர் மாற்றும் திறனாளிகள் செல்வதற்கான வீல் சேரி டிரம்புடன் கூடிய வீல்சேர் வசதி, திறந்த வெளி ஜிம், மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வை ஊக்குவி க்கும் விளக்க பலகைகள் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் நல சங்க நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

# பிங்க் நிறத்தில் ஒளிர்ந்த ரேஸ் கோர்ஸ் கே.எம்.சி.ஹெச் மருத்துவமனை சார்பில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

கோவை, அக்.08-

அக்டோபர் மாதம் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு கோவை சிஹெச் மருத்துவமனை சார்பில் கோவை ரேஸ் கோர்ஸ் பகுதியில் உள்ள தாமஸ் பார்க்கில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் கையெழுத்து இயக்க நிகழ்ச்சியை கேஎம்சிஹெச் மருத்துவமனை தலைவர் டாக்டர் நல்லா ஜி பழனிசாமி, கேஎம்சிஹெச் மருத்துவமனை செயல் இயக்குனர் டாக்டர் அருண் பழனிசாமி ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் கோவை நகரின் பல்வேறு முக்கிய பிரமுகர்கள் கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர், மேற்கு மண்டல ஐஜி செந்தில்குமார், கோவை மாவட்ட காவல்




கண்காணிப்பாளர் கார்த்திகேயன், கேஎம்சிஹெச் மார்பக சிகிச்சை மையத்தின் முதன்மை ஆலோசகர் டாக்டர் ரூபா, ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி வைக்கப்பட்டிருந்த பேனர் களில் கையெழுத்திட்டு தங்களது ஆதரவினை தெரி வித்து சிறப்பித்தனர்.அங்கு அமைக்கப்பட்டிருக்கும் அகண்ட எல்இடி திரையுடன் கூடிய பிரம்மாண்ட மீடியா ட்ரீயும் அந்தப் பகுதி முழுவதும் பிங்க் நிறத்தில் ஒளிர ஆரம்பித்து பார்வையாளர்களை பரவசத்தில் ஆழ்த்தியது. கேஎம்சிஹெச் மார்பக சிகிச்சை மையமானது அனைத்துவிதமான சிகிச்சைகளையும் ஒரே கூரையின் கீழ் அளிக்கும் ஒரு முழுமையான சிகிச்சை மையமாக 2013ம் ஆண்டுமுதல் செயல்பட்டுவருகிறது. சிறந்த நிபுணர்கள், அதிநவீன மருத்துவ தொழில்நுட்ப உதவியுடன் நோயாளி களுக்கு ஆலோசனை, பரிசோதனை, சிகிச்சை ஆகிய அனைத்தும் உள்ளடக்கிய மருத்துவ சேவை களை உலகத்த ரத்துக்கு நிகராக வழங்கிவருகிறது.

மேலும் உலகின் மிகச் சிறந்த 3D மேமோகிராம், அதிநவீன அல்ட்ராசவுண்ட் சிஸ்டம், 3டி எம்ஆர்ஐ, மற்றும் தமிழகத்தில் முதன்முறையாகத் துவக்கப்பட்ட சிம்பியா ப்ரோ.ஸ் பெக்ட எஸ்பிஇடி /சிடிஸ்கேனர் ஆகியவற்றுடன் இம்மார்பக மையம் பலவிதமான தழும்பற்ற அறுவை சிகிச்சைகள் செய்திடும் திறன் பெற்றதாகும். உலகளவில் வருடா வருடம் 5 இலட்சத்திற்கும் அதிகமான பெண்கள் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர் .நோயாளிகள் ஆரம்ப நிலையிலேயே சிகிச்சைக்கு முன் வந்தால் இந்த நோய்க்கு தகுந்த சிகிச்சைகள் அளித்து குணப்படுத்தி விடமுடியும். இந்நிகழ்வில் கேஎம்சிஹெச் மருத்துவர்கள், ஊழியர்கள், மருத்துவ கல்லூரி மாணவர்கள் மார்பக புற்றுநோயில் இருந்து மீண்டவர்கள், மற்றும் திரளான பொதுமக்கள், ஆகியோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.




# ஆறு மணிக்கு மேல் பார்ட்டி வைத்தால் கூட உணவு எடுத்துக் கொள்ளாமல் இருப்பது உடல் நலத்திற்கு சிறந்தது

மருத்துவர் முத்துக்குமார் பேட்டி

குரோம்பேட்டை, அக்.08-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் உள்ள பார்வதி மருத்துவமனை சார்பாக உடல் நலத்தை பாதுகாக்க வேண்டும் என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பார்வதி மருத்துவமனை நிறுவன தலைவர் முத்துக்குமார் தலைமையில் வாக்கத்தான் போட்டி ஆறாவது முறையாக நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மலேசிய துணை தூதரக ஜெனரல் கே.சரவணகுமார் கலந்துகொண்டு கொடியசைத்து துவக்கி வைத்தார்

இதில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் என குடும்பம் குடும்பமாக 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர்.

ஐந்து கிலோ மீட்டர் மூன்று கிலோ மீட்டர் ஒரு கிலோமீட்டர் என மூன்று பிரிவுகளாக நடைபெற்றது.. வாக்கத்தான் நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டது..

அதனைத் தொடர்ந்து பேசிய மருத்துவர் முத்துக்குமார் மிட் நைட் பிரியாணி இரவு பிரியாணி என்ற முறை நமது கலாச்சாரத்தில் இல்லாத ஒன்று இதனால் பல உடல் பிரச்சினைகள் வர வாய்ப்பு உள்ளது 6:00 மணிக்கு மேல் பார்ட்டி வைத்தால் கூட அதில் உணவு இல்லாமல் இருப்பது உடல் நலத்தை பாதுகாக்கும் என தெரிவித்தார்...



# சிவகங்கை மாவட்டம் நெல் முடி கரை திருப்பாச்சேத்தி பொட்ட பாளையம், ஆகிய துணை மின் துணை மின் நிலையங்களில் நாளை மின்தடை

சிவகங்கை, அக்.08-

நெல் முடி கரை திருப்புவனம், புதூர், பழையூர், செல்லப்பநேந்தல், லாடனேந்தல், அல்லிநகரம், கீழராங்கியம், மேலராங்கியம், வயல்சேரி, கலியாந்தூர், மேலவெள்ளூர், கீழவெள்ளூர், மாங்குடி, அம்பலத்தாடி, மணலூர், அகரம், ஒத்தவீடு, மடப்புரம், திருப்பாசேத்தி, பழையனூர், மாரநாடு, ஆவரங்காடு, தஞ்சாக்கூர் மேலச்சொரிக்குளம், வெள்ளிக்குறிச்சி, முதுவன்திடல் பொட்டபாளையம், புலியூர், கொந்தகை, கீழடி, சொட்டதட்டி, சைனாபுரம்,கரிசல்குளம், காஞ்சிரங்குளம், முக்குடி, செங்குளம், ஆகிய துணை மின் நிலையங்களில் நாளை காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை மின்விநியோகம் இருக்காது என மின்செயற் பொறியாளர்கள் தெரிவித்துள்ளனர்..

# பெருங்களத்தூர் தெற்கு பகுதி 55வது வட்ட செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது

பெருங்களத்தூர், அக்.08-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி 55வது வட்ட செயல் வீரர்கள் கூட்டம் வட்டச் செயலாளர் பி.புகேழந்தி, அவர்கள் ஏற்பாட்டில், வட்ட அவைத் தலைவர் ஆர்.கோவிந்தராஜ் அவர்கள் தலைமையில், நடைபெற்ற வட்ட செயல் வீரர்கள் கூட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதி. இளம்சுருதி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள் இந்நிகழ்வில் பெருங்க ளத்தூர் தெற்கு பகுதி



செயலாளர் எஸ்.சேகர், பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி ஒருங்கிணை ப்பாளர்கள், பாக நிலை முகவர்கள் (BLA-2), பாக டிஜிட்டல் ஏஜென்ட் (BDA), கழக மூத்த முன்னோடிகள், கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# "சிவாஜியை விட திறமையாக நடிக்கிறார் அமைச்சர் அன்பில் மகேஸ்" ஹெச்.ராஜா விமர்சனம்

சிவகங்கை, அக்.08-

நடிகர் சிவாஜியை விட அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறமையாக நடிக்கிறார் என பாஜக மூத்த தலைவர் ஹெச்.ராஜா விமர்சித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் அக்.13 ம் தேதி பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தேர்தல் பிரச்சாரம் செய்கிறார். இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் சிவகங்கையில் மாவட்டத் தலைவர் பாண்டித்துரை தலைமையில் நடைபெ ற்றது. நகரத் தலைவர் உதயா வரவேற்றார். இந்நிகழ்ச்சியில், மூத்த தலைவர் ஹெச்.ராஜா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்துக்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ஹெச்.ராஜா கூறியது: "மதுரையில் அக்.12ம் தேதி தேசியத் தலைவர் ஜே.பி.நட்டா தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கி



வைக்கிறார். அக்.13ம் தேதி காரைக்குடியில் நயினார் நாகேந்திரன் பிரச்சாரம் செய்கிறார். கரூரில் துயர சம்பவத்துக்கு மாநில அரசின் நிர்வாக சீர்கேடுதான் காரணம். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திமுககாரர் போல் செயல்படுகிறார். அவரை பணியிடை நீக்கம் செய்திருக்க வேண்டும்.

கள்ளக்குறிச்சியில் 60 பேர் உயிரிழந்தபோது சென்று பார்க்காத முதல்வர், கரூருக்கு மட்டும் ஏன் உடனடியாக சென்றார்? அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நடிகர் சிவாஜியை விட திறமையாக நடிக்கிறார். முதல்வர் தான் என்ன பேசுகிறோம் என்று தெரியாமலேயே பேசுகிறார். காங்கிரஸ், திமுக சேர்ந்து கொடுத்த கச்சத்தீவை மீட்க வேண்டும் என்று பேசுகிறார்.

திமுக அரசிடம் நேர்மை கிடையாது. காங்கிரஸ், திமுக நீட் தேர்வை கொண்டு வந்துவிட்டு, அதை திமுகவே நீக்க சொல்கிறது. கடந்த நான்கரை ஆண்டுகளில் தமிழகத்தில் 6,700 படுகொலைகள் நடந்துள்ளன. திமுக அமைச்சர்கள் 15 பேர் ஊழல் வழக்கை எதிர்கொள்கின்றனர். திமுகவை எதிர்த்து கட்சி தொடங்கிய கமல்ஹாசன் எம்.பி பதவிக்காக விலை போய்விட்டார். திமுக அரசு எதிர்க்கருத்தே வரக்கூடாது என்று நினைக்கிறது. அரசுக்கு எதிராக பேசுவோரை கைது செய்கின்றனர். திமுக அணைய போகும் விளக்கு. திருமாவளவன் ஆதிதிராவிடர் மக்களை பற்றி கவலைப்படும் தலைவர் இல்லை" என்று ஹெச்.ராஜா கூறினார்.




■ நீலகிரி மாவட்டம், கூடலூர் நாடுகாணி ஜீன்புல் பூங்கா வளாகத்திலிருந்து, வனத்துறை சார்பில் வன உயிரின வார விழாவினை முன்னிட்டு நடைபெற்ற கொடி அணிவகுப்பு பேரணியை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆ.இராசா அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் கொடியசைத்து துவக்கி வைத்தார். உ



# இந்தியன் யூத் ட்ரடிஷனல் சிலம்பம் அசோசியேசன் சார்பில் சர்வதேச அலவிலான நடப்பு ஆண்டு சிலம்ப போட்டிகள்

கோவை, அக்.08-

கோவை மாவட்டத்தைச் சார்ந்த சிலம்பாட்டம் மாணவர்கள் கலந்து கொண்ட உலக அளவிலான சிலம்பாட்ட போட்டிகள் பாண்டிச்சேரியில் உள்ள ராஜீவ் காந்தி உள்ளிருப்பு மைதானத்தில் நடைபெற்றது. இந்த சர்வதேச சிலம்ப போட்டிகளில் சிறப்பு அழைப்பாளராக பாண்டிச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்கள் கலந்து கொண்டு போட்டிகளை துவக்கி வைத்தார்கள். இதில் தமிழகத்தைச் சார்ந்த பீஷ்மர் குருகுலம் விளம்பர பயிற்சி பள்ளி நிறுவனர் அ.சுப்பிரமணியம் தொழுமுறை சிலம்ப போட்டியை துவங்கி வைத்தார். இந்த சிலம்ப போட்டிகளில் ஒற்றைக் கம்பு, இரட்டைக் கம்பு, தொடுமுறை சிலம்பம் ஆகியவை நடத்தப்பட்டது. இதில் மலேசியா. இலங்கை. பூட்டான். கத்தார், நேபால் போன்ற நாட்டைச் சேர்ந்த மாணவ மாணவிகளும் இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் பத்துக்கும் மேற்பட்ட சிலம்ப அமைப்பைச் சார்ந்த மாணவ மாணவிகளும் ஆறு வயதிலிருந்து 25 வயது வரை கலந்து கொண்டனர். இப்போட்டிகளில் தமிழ்நாட்டைச் சார்ந்த கோவை பீஷ்மர் குருகுலம் சிலம்ப பயிற்சி பள்ளி மாணவ மாணவிகள் 23 பேர் கலந்து கொண்டு அனைத்து போட்டிகளிலும் முதல் பரிசாக தங்கபதக்கங்களை வென்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்தனர். நிகழ்வில் அமைப்பின் தலைவர் வேல்முருகன் இந்த அமைப்பை பாராட்டி கோப்பைகளுடன் சான்றிதழும் பதக்கங்களும் வழங்கினார். மேலும் மகா குரு சு.அருள்பிரகாஷ் மற்றும் போர்கலைச்சக்கரவர்த்தி அ.சுப்ரமணியம் ஆகியோருக்கு பொன்னாடை மற்றும் நினைவுப் பரிசும் வழங்கி கௌரவித்தார். அடுத்து ஒரு சிலம்பு அமைப்பில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களும் தங்கப்பதக்கம் வெல்வது இதுவே முதல் முறை என்று பீஷ்மர் குருகுலம் அமைப்பிற்கு பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

# கோவையில் இன்னோ வாலி வர்க்ஸ் முதன்மை மையம் திறப்பு



கோவை, அக்.08-

தொழில்நுட்பத் துறையிலும் திறன் வளர்ச்சியிலும் முன்னணி இன்னோ வாலி வர்க்ஸ், கோயம்புத்தூரில் டாக்டர் என்.ஜி.பி. இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியில் தனது முதற் மையம் (Center of Excellence) திறப்பை வெற்றிகரமாகக் கொண்டாடியது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இன்னோ வாலி வர்க்ஸ் Salesforce Delivery Head மற்றும் நிறுவனர் திலீபன் தங்கவேல் மற்றும் என்.ஜி.பி தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் பிரபா ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இதில், வேல்டெக் யூனிவர்சிட்டி, கற்பகம் யூனிவர்சிட்டி, MCET, ராமகிருஷ்ணா கல்லூரி மற்றும் NGP கல்லூரி ஆகிய முன்னணி கல்வி நிறுவனங்களிலிருந்து 40 திறமையான இன்டர்ன்கள் தொழில்முறை பயணத்தை துவங்கியுள்ளது.

ஒவ்வொரு இன்டர்னுக்கும் மேக் புக் உட்பட பிரீமியம் ஒன்போர்டிங் கிட் வழங்கப்பட்டு, அவர்களின் முதல் நாள் அனுபவத்தை மறக்கமுடியாததாக மாற்றியது.

கல்வியியலும் தொழில் துறையும் இடையேயான இடைவெளியை குறைக்கும் நோக்கில் துவங்கிய இன்னோ வாலி வர்க்ஸ், உலகளாவிய அளவில் நம்பகமான Salesforce பங்குதாரராக வளர்ந்துள்ளது. இந்நிறுவனம் அமெரிக்கா, UK, கனடா, UAE மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் சேவைகள் வழங்கி வருகிறது. குறிப் பிடத்தக்கது. தற்போது சென்னையிலும் அமெரிக்காவிலும் கிளைகள் திறப்பதால், நிறுவன வளர்ச்சியின் வேகம் மற்றும் விரிவாக்க திட்டங்கள் தெளிவாக வெளிப்படுகின்றன.

எதிர்காலத்திற்காக, இனோ வாலி வர்க்ஸ் வரும் ஆண்டில் 250 ஊழியர்களுக்கு மேல் தனது அணியை விரிவுப்படுத்த திட்டமிட்டு உள்ளது, இளம் தொழில்முனைவோர்களுக்கு வாய்ப்புகளை அதிகரித்து, புதுமை மற்றும் திறன் வளர்ச்சியில் முன்னணி நிறுவனமாக திகழும் நோக்கத்தை உறுதி செய்கிறது.

இது குறித்து இன்னோ வாலி வர்க்ஸ் Salesforce Delivery Head மற்றும் நிறுவனர் திலீபன் தங்கவேல் கூறியதாவது:

இன்றைய நாள் அனைவருக்கும் பெருமையும், உற்சாகமும் மிகுந்த நாள் ஆகும். எங்கள் நிறுவனத்தின் முதல் Center of Excellence திறப்பு என்பது ஒரு சாதனை மட்டும் அல்லஷ திறன், குழுவீயம் மற்றும் எதிர்காலக் காட்சி ஆகியவற்றை கொண்டாடும் தருணமாகும். 40 இளம் தொழில்முனைவோர்கள் சரியான கருவிகள் மற்றும் வழிகாட்டி உடன் பயணத்தை துவங்குவதை காணும் பொழுது பெருமிதம் உண்டு. சென்னையும் அமெரிக்காவும் உள்ள நமது விரிவாக்கத்துடன், 250 ஊழியர்களுக்கு மேல் வளர்ச்சி திட்டங்களுடன், எதிர்காலம் இன்னும் பிரகாசமாக உள்ளது அதற்கு இதுவே ஆரம்பம் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில், பெற்றோர்கள், வேலை வாய்ப்பு அதிகாரிகள், மற்றும் தொழில்துறையினர் கலந்து, மாணவர்களின் முதல் நாள் நிகழ்வை நேரில் பார்வையிடினர்.





■ செங்கல்பட்டு மாவட்டம் கிண்டி அடுத்த பட்ரோடு அருகே சிஎஸ்ஐ தூய தோமா மேல்நிலைப்பள்ளியின் நாட்டு நலப்பணி திட்ட சிறப்பு முகாம் 26/9/25 அன்று முதல் 2/10/25 வரை 7 நாட்கள் நசரேத்புரம் பகுதியில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளர்களாராக பேராய கல்வி அலுவலர் டாக்டர் வி.இராஜு அவர்கள் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். மாவட்ட தொடர்பு அலுவலர் தயாளன். மற்றும் பள்ளியின் தாளாளர் ஜேம்ஸ் ஆல்பர்ட் அவர்கள் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள் இந்த நிகழ்ச்சியில் பள்ளியின் தலைமை ஆசிரியர் எமிலி கெத்சி சூசன்னா, வட்டாரத் தலைவர், அருட்பணி பால் சுதாகர், பள்ளியின் திட்ட அலுவலர் டாக்டர் ஆல்பிரட் தேவநேசன், துணை திட்ட அலுவலர் பி.ஒடினா மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## தென்காசி மாவட்டம் கடையம் வட்டாரம், கடையம், சத்திரம் பாரதி மேல்நிலைப்பள்ளியில்

# நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாம் 11.10.2025 அன்று நடைபெற உள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தகவல்

தென்காசி, அக்.08-

தென்காசி மாவட்டத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம் கடையம் வட்டாரம், கடையம், சத்திரம் பாரதி மேல்நிலைப்பள்ளியில் வைத்து நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாம் 11.10.2025 (சனிக்கிழமை) காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெற உள்ளது. இம்முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல், மகப்பேறு மற்றும் மகளிர் நலம், குழந்தைகள் நலம், இருதயவியல், நரம்பியல், தோல்,, பல், கண், காது, மூக்கு, தொண்டை, மனநலம், இயன்முறை, நுரையீரல் மற்றும் இந்திய முறை மருத்துவம் ஆகிய அனைத்து வகையிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, உரிய மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ், முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டை போன்ற அனைத்து சேவைகளும் தகுதியுள்ளவர்களுக்கு ஒரே இடத்தில் கிடைக்கும் விதமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே, பொது மக்கள் அனைவரும் முகாமிற்கு வருகை தந்து மருத்துவப் பரிசோதனை பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.



# அன்னூர் பேரூராட்சியில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை தொடங்கி வைத்தார் நீலகிரி எம்.பி., ஆ.இராசா

கோவை, அக்.08-

கோவை மாவட்டம் அன்னூர் பேரூராட்சியில் உள்ள பேருந்து நிலையத்தில் தாய்மார்கள் பாலூட்டும் அறை திறப்பு விழா மற்றும் ரூபாய் 181.15 இலட்சம் மதிப்பீட்டில் பேரூராட்சி பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா அன்னூர் பேரூராட்சி மன்ற தலைவர் இரா. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராக நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா கலந்துகொண்டு அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்து சிறப்பித்தார். பேரூராட்சி செயல் அலுவலர் கார்த்திகேயன் முன்னிலை வகித்தார். நிகழ்வில் உடன் திமுகவினர் அன்னூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ந.பழனிச்சாமி, தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் மு.தனபாலன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் அம்பாள் நந்தகுமார், துணைத் தலைவர் விஜயகுமார், நகர நிர்வாகிகள் எட்ராஜ், ஹரி சங்கர், பிரேம் தேவா, மகளிர் அணியினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

# மேட்டூர் அணையில் இருந்து நீர் திறப்பு: 15,000 கனஅடியாக குறைப்பு

சேலம், அக்.08-

மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு திறக்கப்பட்டு வரும் நீரின் அளவு நேற்று முதல் விநாடிக்கு 15 ஆயிரம் கனஅடியாகக் குறைக்கப் பட்டுள்ளது. மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு நேற்று முன்தினம் வரை விநாடிக்கு 18 ஆயிரம் கனஅடி வீதம் நீர் திறக்கப்பட்டு வந்தது.

இதனிடையே, டெல்டா மாவட்டங்கள் உள்பட தமிழகத்தின் பல மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. எனவே, டெல்டா மாவட்டங்களில் பாசனத்துக்கான நீர் தேவை குறைந்தது.

எனவே, மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு திறக்கப்பட்டு வரும் நீரின் அளவு நேற்று காலை முதல் விநாடிக்கு 15 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது. கால்வாய் பாசனத்துக்கான நீர் திறப்பு விநாடிக்கு 500 கனஅடியாக நீடிக்கிறது.

இதற்கிடையே காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்ததால், மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 5,256 கனஅடியாக இருந்த நீர் வரத்து நேற்று 6,251 கனஅடியாக அதிகரித்தது. அணையின் நீர் இருப்பு 83.14 டிஎம்சியாக இருந்தது.





■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை மூலம் தொழிலாளர் நலத்துறை அலுவலர்களுக்கான பணித்திறனாய்வு கூட்டம் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அரசு செயலாளர் திரு.கொ.வீர ராகவ ராவ்.இ.ஆ.ப., அவர்கள், தொழிலாளர் ஆணையர் திரு.சி.ராமன் இ.ஆ.ப. அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## மதுரை தமுக்கம் மைதானத்தில் வருகின்ற 11.10.2025 மற்றும் 12.10.2025 ஆகிய நாட்களில் நடைபெறவுள்ள

# இயற்கை பஜாரில் பொருட்களை வாங்குவதற்காக மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன் குமார் ரூ.1000/ வழங்கி அதற்கான கூப்பன்களை பெற்றுக்கொண்டார்

மதுரை, அக்.08-

மதுரை மாவட்ட நிர்வாகம் மற்றும் தனியார் பங்களிப்புடன் "மாமதுரை இயற்கை மதுரை" என்ற கருப்பொருளில் இயற்கை பஜார் அக்டோபர் 11 மற்றும் 12 ஆம் தேதி மதுரை தமுக்கம் மைதானம் மாநாட்டு மையத்தில் நடைபெற உள்ளது. இக்கண்காட்சியின் நோக்கம் பொதுமக்களிடையே இயற்கை உணவுப் பொருட்கள், பாரம்பரிய விவசாயம் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

இக்கண்காட்சியில் இயற்கை முறையில் விளைந்த காய்கறிகள், பழங்கள், சிறுதானியங்கள், மரச்செக்கு எண்ணெய், நாட்டு மாட்டு நெய், ரசாயனம் இல்லாத மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள், பனை ஓலை மற்றும் இயற்கை பொருட்களால் செய்யப்பட்ட அலங்காரப் பொருட்கள், பாரம்பரிய நெல் மற்றும் தானிய விதைகள், விவசாய கருவிகள் உள்ளிட்டவை காட்சிப்படுத்தப்பட்டு விற்பனைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், **மஞ்சள், மல்லி, சிறுதானிய கேக், லட்டு, ஊறுகாய், கருவாடு, ஆர்கானிக் ஐஸ்கிரீம், சுண்டல், உள்ளிட்ட பல்வேறு இயற்கை தயாரிப்புகளும் கண்காட்சியில் இடம்பெறுகின்றன. மொத்தம் 200 ‹மீமீறீ:200›க்கும் மேற்பட்ட அரங்குகளில் மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் விவசாயிகள் தங்களின் இயற்கை விளைபொருட்கள் மற்றும் தயாரிப்புகளை காட்சிப்படுத்தவுள்ளனர்.

இந்த மாமதுரை - இயற்கை மதுரை பஜாரினை அக்டோபர் 11 அன்று மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைக்க உள்ளார்கள்.

மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கே. ஜே. பிரவீன் குமார், "இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட பொருட்களை ஊக்குவிக்கும் நோக்கில் அனைத்து அரசு அலுவலர்களும் ஏற்கனவே அச்சிடப்பட்டுள்ள ரூ.50/ , ரூ.100/ மதிப்புடைய கூப்பன்களை தங்கள் விருப்பத்தின் அடிப்படையில் பெற்றுக்கொண்டு இயற்கை பஜாரில் உள்ள அரங்குகளில் கூப்பன்களை வழங்கி பொருட்களை பெற்றுக்கொண்டு மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும்" என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கே.ஜே. பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னுதாரமாக அச்சிடப்பட்டுள்ள ரூ.1000/ மதிப்பிலான கூப்பன்களை பெற்றுக் கொண்டார். பொதுமக்களும் இந்த இயற்கை பஜாரில் கலந்து கொண்டு ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிகாட்டும் இந்த முயற்சியில் பயனடையுமாறு மாவட்ட நிர்வாகம் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# "புதிதாக கட்டப்பட்டு வரும் நாய்கள் காப்பக பணிகள் குறித்து" - ஆணையாளர் சித்ரா விஜயன் ஆய்வு



மதுரை, அக்.08-

மதுரை மாநகராட்சி தல்லாகுளம் பகுதியில் நாய்கள் காப்பகம் அமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை ஆணையாளர் திருமதி. சித்ரா விஜயன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (07.10.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மதுரை மாநகராட்சி ஐந்து மண்டலங்களுக்கு உட்பட்ட 100 வார்டுப் பகுதிகளில் பொதுமக்களுக்கு இடையூறாக தெருக்களில் சுற்றி திரியும் நாய்கள் பிடிக்கப்பட்டு வெள்ளைக்கல் மற்றும் செல்லூர் பகுதியில் செயல்படும் மாநகராட்சியின் நாய்கள் காப்பகத்தில் கருத்தடை மற்றும் ரேபிஸ் வெறிநோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. மேலும் இப்பணிக்காக மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்.31 தல்லாகுளம் டாக்டர் தங்கராஜ் சாலையில் உள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக நாய்கள் காப்பகம் கட்டப்பட்டு வருகிறது. இக்காப்பகத்தில் 1 கூண்டிற்கு இரண்டு நாய்கள் வீதம் மொத்தம் 60 நாய்கள் அடைப்பதற்கு தனித்தனியாக கூண்டுகள் தயார் செய்யப்பட்டு வருகிறது. இக்காப்பகத்தில் தெருக்களில் சுற்றித்திரியும் நாய்கள் பிடிக்கப்பட்டு கருத்தடை மற்றும் ரேபிஸ் வெறிநோய் தடுப்பூசிகள் போடப்படும். மேலும் இக்காப்பகத்தில் நாய்களை பராமரிக்க தேவையான கால்நடை மருத்துவர்கள் பணியமர்த்தப்பட உள்ளனர். மண்டலம் 2ல் தல்லாகுளம் பகுதியில் கட்டப்பட்டு வரும் நாய்கள் காப்பகம் அமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை ஆணையாளர் அவர்கள் இன்று (07.10.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் இப்பணிகளை பணிகளை விரைந்து முடிக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது உதவிப் பொறியாளர் அமர்தீப் உட்பட மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக சென்னலக்குடி கிராமப் பகுதியில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில்

# ரூபாய் 1.38 கோடி மதிப்பீட்டில் திறந்து வைக்கப்பட்ட 24 வீடுகளுக்கான சாவியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பயனாளிகளுக்கு நேரில் வழங்கி சிறப்பித்தார்

சிவகங்கை, அக்.08-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக பொது மற்றும் மறுவாழ்வுத்துறையின் சார்பில் இன்றையதினம் (6.10.2025) சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டத்திற்குட்பட்ட சென்னலக்குடி கிராமப் பகுதியில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் திறந்து வைக்கப்பட்ட வீடுகளுக்கான சாவியினை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் பயனாளிகளுக்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நேரில் வழங்கி சிறப்பித்து தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும், ''எல்லோருக்கும் எல்லாமும்'' என்ற அடிப்படையில், அனைத்துத்தரப்பு மக்களுக்கும் பயனுள்ள வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில் நமது அண்டை நாடான இலங்கையில் நெருக்கடியான சூழ்நிலையின் காரணமாக, பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டு தமிழகம் வந்த ஈழத்தமிழர்களின் நலனை காக்கின்ற வகையில், அவர்களின் தாய் தமிழகமாக திகழ்ந்து வரும் தமிழகத்தில், உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் மற்றும் அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் தமிழக அரசு அவர்களுக்கு வழங்கி பாதுகாத்து வருகிறது.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த 2006 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள போது, தமிழகம் முழுவதும் அனைத்துப் பகுதிகளிலுள்ள முகாம் வாழ் தமிழர்களின் மீது அக்கறை கொண்டு, தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட முகாம்களில், எதிர்கால திட்டங்கள் குறித்தும், தேவைகள் குறித்தும், மேற்கொள்ள வேண்டிய சாலை வசதி, மின் வசதி, உட்கட்டமைப்பு வசதி ஆகியப்பணிகளை மேம்படுத்துவதற்கென என்னையும், அச்சமயம் இருந்த வீட்டுவசதித்துறை அமைச்சரையும் இப்பணிக்கென நியமித்து, அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட்டார்கள்.

அதன்படி, முறையான ஆய்வு மேற்கொண்டு, முகாம்களில் மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டுப் பணிகள் குறித்து அறிக்கை சமர்ப்பித்து, படிப்படியாக ஒவ்வொரு முகாம்களிலும் மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.




அதில், சிவகங்கை மாவட்டத்தில் முகாம் வாழ் தமிழர்கள் வாழும் 6 பகுதிகளும் அதில் அடங்கியுள்ளது. பின்னர், ஆட்சி மாற்றங்களின் காரணத்தினால், முந்தைய ஆட்சியாளர்கள் இதில் தனிகவனம் செலுத்தாமல் கிடப்பில் போட்டுவிட்டனர்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில் சிறப்பான ஆட்சியினை தமிழகத்தில் நடத்தி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இருண்ட ஈழத்தமிழர்களின் வாழ்க்கையில் ஒளிவிளக் கேற்றிடும் வகையில், அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்திடும் பொருட்டு, சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

சிவகங்கை மாவட்டத்தில் தாயமங்கலம், காரையூர், மூங்கிலூரணி, சென்னலக்குடி, ஒக்கூர், தாழையூர் ஆகிய 6 பகுதிகளில் முகாம் வாழ் தமிழர்கள் வாழும் பகுதிகள் உள்ளது. அப்பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கென அரசுத்துறைகளுடன் தனியார் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்புடன் ஆய்வு மேற்கொண்டு, அதனை ஆலோசனைக் குழுவின் மூலம் பரிசீலித்து, அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி, மானாமதுரை வட்டத்திற்குட்பட்ட மூங்கிலூரணி பகுதியில் 196 வீடுகள் ரூபாய் 11.30 கோடி மதிப்பீட்டிலும், இளையான்குடி வட்டத்தி ற்குட்பட்ட தாயமங்கலம் பகுதியில் 52 வீடுகள் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும், திருப்பத்தூர் வட்டத்திற்குட்பட்ட காரையூர் பகுதியில் 112 வீடுகள் ரூபாய் 7.35 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூபாய் 21.65 கோடி மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கான பணிகளும் மற்றும் மேற்கண்ட பகுதிகளில் அடிப்படை வசதிக்கென ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும் என ஆக மொத்தம் ரூபாய் 25.65 கோடி மதிப்பீட்டில் இலங்கை தமிழர்களுக்கான இல்லங்கள் கட்டுவதற்கான பணிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிகள் அனைத்தும் விரைவில் முடிவுற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதையும் இத்தருணத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இன்றையதினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்கள் திறந்து வைக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. அதில், சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டம், சென்னலக்குடி கிராமப் பகுதியில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமும் ஒன்றாகும். அதில், நான்கு வீடுகள் அடங்கிய 6 தொகுப்பு வீடுகள் (மொத்தம் 24 வீடுகள்) ரூபாய் 1,38,30,000/ மதிப்பீட்டில் கட்டுவதற்கான பணிகள் கடந்த 4.7.2024 ஆம் தேதியன்று துவங்கப்பட்டு, தற்போது முடிவு பெற்றுள்ளது.

இதில், நான்கு வீடுகள் கொண்ட ஆறு தொகுப்பு வீடுகளில் ஒரு வீட்டின் பரப்பு 300சதுர அடியாகும். மேலும், பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான பேவர் பிளாக்சாலை அமைத்தல், பைப்லைன் வசதி ஏற்படுத்துதல், மேல்நிலை தொட்டி அமைத்தல் மற்றும் தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைத்தல் போன்ற வசதிகளும் ரூபாய் 39,28,000/ மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, மொத்தம் ரூபாய் 1,77, 58,000/ மதிப் பீட்டில் சிறப்பாக கட்டி முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அர்பணிக் கப்பட்டு, வீடுகளுக்கான சாவிகள்க்கு வழங்கப்பட்டுள்ளது.

ஓராண்டிற்குள் கட்டி முடிக்கப்பட்டு, அர்பணிக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர்களுக்கான முகாமின் சுற்றுப்புறத்தினை தூய்மையாக பராமரித்திடல் வேண்டும். அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ள இம்முகாம்களில் பொது மக்களின் கோரிக்கைக்கி ணங்க விரைவில் சுத்திகரிப்பு நிலையமும் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதுபோன்று அனைத்து தரப்பு மக்களுக்கான பல்வேறு திட்டங்களை நாளுக்கு நாள் தொலைநோக்கு சிந்தனையுடன் செயல்படுத்தி தலைசிறந்த முதலமைச்சராக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்து வருகிறார்கள் என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த், செயற்பொறியாளர் திருமதி அனுராதா, திருப்புவனம் பேரூராட்சி தலைவர் திரு.சேங்கைமாறன், உதவி செயற்பொறியாளர் திருமதி மாரியம்மாள், உதவி பொறியாளர் திரு.ராஜா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.விஜயகுமார், திரு.சுப்பிரமணி, வட்டாட்சியர் (இலங்கை தமிழர் மறுவாழ்வு) திருமதி சுமதி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக தாட்கோ சார்பில்

# கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அதிகரம் உயர்நிலைப்பள்ளியில் திறந்து வைக்கப்பட்ட 4 வகுப்பறை மற்றும் 1 கழிவறை கட்டிடம் திறப்பு விழா நிகழ்ச்சியில், அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பங்கேற்று குத்துவிளக்கேற்றி வைத்து சிறப்பித்தார்

சிவகங்கை, அக்.08-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக தாட்கோ சார்பில், சிவகங்கை மாவட்டம், கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அதிகரம் உயர்நிலைப்பள்ளியில் திறந்து வைக்கப்பட்ட வகுப்பறை மற்றும் கழிவறை கட்டிடம் திறப்பு விழா நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் பங்கேற்று, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், குத்துவிளக்கேற்றி வைத்து சிறப்பித்து தெரிவிக்கையில்,



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கடந்த நான்கரை ஆண்டுகளில் எண்ணற்ற திட்டங்கள் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருவது மட்டுமன்றி, அனைத்து துறைகளும் சீரான வளர்ச்சியை பெற்றிடும் வகையில் சிறப்பான நிர்வாகம் தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதில், கல்வித்துறையில் தனி கவனம் செலுத்தி, அதற்கென ஏறத்தாழ 48,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கற்றலுக்கு தேவையான அனைத்து உபகரணங்கள் மட்டுமன்றி, உயர்கல்வி பயில்வதற்கும் தமிழ் புதல்வன் மற்றும் புதுமைப் பெண் திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, மாணாக்கர்களிடையே கற்றலுக்கான ஆர்வம் ஏற்படும் வகையில், நாளுக்கு நாள் பல்வேறு புதிய திட்டங்கள் மாணாக்கர்களுக்கென செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அவ்வாறு, திட்ட செயல்பாடுகள் மட்டுமன்றி, பள்ளிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்பட்டு நவீனமயமாக்கப்பட்டு வருகிறது. அதனடிப் படையில், சிவகங்கை மாவட்டத்தில் அரசின் திட்டங்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் வாயிலாக பல்வேறு வகையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தந்த பகுதிகளில் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் சார்பில் அதிகரம் உயர்நிலைப்பள்ளியில் ரூபாய் 1.27 கோடி மதிப்பீட்டில் நான்கு வகுப்பறை கட்டிடம் மற்றும் ஒரு கழிப்பறை கட்டிடம் ஆகியவைகள் கட்டப்பட்டு மாணாக்கர்களின் பயன்பாட்டிற்கென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, இப்பள்ளியில் கூடுதல் தேவைகளான கலையரங்கம் சீரமைப்பு பணிகள் மற்றும் சுற்றுச்சுவர் சீரமைப்பு பணிகள் மேற்கொள்வதற்கென வரப்பெற்றுள்ள கோரிக்கைக்கிணங்க மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் சுற்றுச்சுவர் அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.


மாணாக்கர்களின் நலனை கருத்தில் கொண்டு, இதுபோன்ற எண்ணற்ற திட்டங்கள் மற்றும் நவீன உட்கட்டமைப்பு வசதிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாணாக்கர்கள் இதனை கருத்தில் கொண்டு, கல்வியில் சிறந்து விளங்குவது மட்டுமன்றி, விளையாட்டிலும் சிறந்து விளங்கி தங்களின் உடல் நலத்தினை சீராக பேணிக்காத்திட வேண்டும். தங்களுக்கு ஆர்வமுள்ள துறையை தேர்ந்தெடுத்து, தங்களுக்கான இலக்கினை நிர்ணயித்து, அதனை தனது குறிக்கோளாக கொண்டு, அதில் சாதித்து காட்ட வேண்டும். தங்களின் முன்னேற்றமானது தங்களது வீட்டிற்கு மட்டுமன்றி, நாட்டிற்கும் பெருமை சேர்ப்பதற்கு அடிப்படையாக திகழ்கிறது.

எனவே, அரசின் திட்டங்களை மாணாக்கர்கள் முழுமையாக பயன்படுத்திக் கொண்டு, வாழ்வில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். அந்த ஆய்வின் போது, சுகாதாரம் மற்றும் மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் உணவு, உணவு பொருட்களின் தரம் மற்றும் மேம்படுத்த வேண்டிய வசதிகள் ஆகியன குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், ஆதிதிராவிடர் நல அலுவலர் (பொ) செல்வி கீர்த்தனா மணி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) திரு.மாரிமுத்து, உதவி செயற்பொறியாளர், தாட்கோ (மதுரை மண்டலம்) திரு.சேவுககுமரன், திருப்பத்தூர் வட்டாட்சியர் திரு.மாணிக்கவாசகம், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.சுந்தரம், பள்ளி தலைமையாசிரியர் திரு.பொன்மனச்செம்மல் மற்றும் ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




■ மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் மற்றும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் கோவி.செழியன் அவர்கள் ஆகியோர் அழகப்பா பல்கலைக்கழக வளாக வீறுகவியரசர் முடியரசனார் அரங்கத்தில், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக தமிழ் பண்பாட்டு மையம் நுண்கலைத்துறை மற்றும் வீறுகவியரசர் முடியரசனார் அவைகளம் ஆகியவைகள் இணைந்து நடத்திய வீறுகவியரசர் முடியரசனார் வெள்ளணி விழாவில், "வீறுகவி பாடிய வீரக்கவி நூலினை வெளியிட்டனர்.



# ஜெயச்சந்திரனின் டெக்ஸ்டைல்ஸ், வைரம் மற்றும் தங்க நகை மாளிகை 5வது கிளை கீழ்கட்டளையில் திறப்பு

கீழ்கட்டளை, அக்.08-

ஜெயச்சந்திரனின் டெக்ஸ்டைல்ஸ், வைரம் மற்றும் தங்க நகை மாளிகை 5வது கிளை கீழ்கட் டளையில் மேடவாக்கம் மெயின் ரோட்டில், பிரமாண்டமாக 2 லட்சம் சதுர அடியில் ( அக்டோபர் :05) திறக்கப்பட்டது. ஜவுளி மற்றும் தங்க நகைகள் வீட்டு உபயோகப் பொருட்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் குறைந்த விலையில் வழங்குவது தான் ஜெயச்சந்திரனின் டெக்ஸ்டைல்ஸ் நோக்கம் ஆகும் கூறி ஜெயச்சந்திரன் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத் தலைவர் : சுந்தரலிங்கம் நாடார் மற்றும் குடும்பத்தினர் ஆகியோர் இணைந்து ரிப்பன் வெட்டி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தனர். இந்த விழாவில் அனைத்து கட்சி அரசியல் தலைவர்கள், சினிமா துறை பிரபலங்கள், வியாபாரி சங்க தலைவர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். 1பவுனுக்கு 4000 ரூபாய்க்கு இலவசமாக துணிகள் வாங்கிக் கொள்ளும் வசதி, 1000ரூபாய்க்கு மேல் வாங்குபவர்களுக்கு கூப்பன் வழங்கப்பட்டு சிறந்த வாசகத்தை தேர்ந்தெடுத்து முதல் பரிசு கார், 2வது பரிசு மோட்டார் சைக்கிள், 3வது பரிசு ஆயிரம் பேருக்கு பரிசு வழங்கப்படும் என்று நிறுவனத் தலைவர்: சுந்தரலிங்கம் நாடார் தெரிவித்தார். தீபாவளியை முன்னிட்டு சிறப்பு சலுகைகளும் ஜெயச்சந்திரன் டெக்ஸ்டைல்ஸ் வழங்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# "தவெக தலைவர் விஜய் மீது எந்த வன்மமும் இல்லை" திருமாவளவன்

சென்னை, அக்.08-

தவெக தலைவர் விஜய்யை கைது செய்ய வலியுறுத்தவில்லை என்றும், அவர் மீது எந்த வன்மமும் இல்லை என்றும் விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

கரூரில் தவெக தலைவர் விஜய் நடத்திய பிரச்சாரக் கூட்டத்தில் சிக்கி உயிரிழந்த 41 பேருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் சென்னை, அசோக் நகரில் உள்ள கட்சித் தலைமையகத்தில் விசிக தலைவர் திருமாவளவன் தலைமையில் நினைவேந்தல் கூட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்குப் பின் செய்தியாளர்களிடம் திருமாவளவன் கூறியவது: "கரூர் சம்பவத்தில் பலியானவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதை கடந்து அரசியல் ஆதாயம் தேட பாஜக, கூட்டணி கட்சிகள் முயற்சிக்கின்றன. இதை ஏற்க முடியாது.

விஜய் மீது எந்த வன்மமும் இல்லை. அவரை கைது செய்ய வேண்டும், சிறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தவில்லை. ஆனால், சம்பவத்துக்கு தார்மிக பொறுப்பேற்க வேண்டும்.

பாஜகவின் சூதாட்டத்தை அம்பலப்படுத்துவதால் இல்லாத கட்டுக் கதைகளை அண்ணாமலை கூறுகிறார். விசிகவை யாராலும் சிதறடிக்க முடியாது. கொள்கை சார்ந்த இளைஞர்களே கட்சியில் இருக்கிறார்கள். திரைக் கவர்ச்சிக்கு விசிகவினர் பலியாக மாட்டார்கள். பாஜகவினருக்கு உண்மையிலேயே மானமிருந்தால் கொள்கை எதிரி என அறிவித்த நிலையில், விஜய்யோடு வலிந்து உறவாட முயற்சிக்க மாட்டார்கள்.

கரூர் நெரிசலுக்கு தவெக காரணம் என யாரும் குற்றம்சாட்டவில்லை. மக்கள் பேசுகிறார்கள். நெரிசல் உயிரிழப்பை திமுக திட்டமிட்டு அரங்கேற்றியது போல பாஜக திரிக்க முயற்சிக்கிறது. கேட்ட இடத்தை கொடுக்கவில்லை என்றால் ஏன் தவெக கூட்டம் நடத்துகிறது. இங்குதான் நடத்த வேண்டும் என காவல் துறை கட்டாயப்படுத்தியதா?

செந்தில் பாலாஜி மீது பழிசுமத்தி, தேர்தல் வேலை செய்யவிடாமல் தடுக்கும் முயற்சியில் பாஜக இருக்கிறது. இதுமட்டுமின்றி குழு அமைத்து ஆய்வு என்ற பெயரில் நிர்வாகம் சரியில்லை என நிறுவ முயற்சிக்கின்றனர். 10 நிமிடத்தில் எப்படி ஆம்புலன்ஸ் வந்தது போன்ற அரசியல் அறியாமையுடன் கேள்வி எழுப்புகின்றனர்.

அமைச்சர்கள் பொறுப்புணர்வோடு வந்திருக்கிறனர். முதல்வர் நடு இரவில் சென்றதற்கு விஜய் பாராட்டி நன்றி தெரிவித்திருக்க வேண்டும் அல்லவா? விஜய்யை கையில் எடுக்க பாஜக முயற்சிக்கிறது. அவர் சிக்கிவிடக் கூடாது'' என்றார் திருமாவளவன்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161